சுருக்கம் 004857

பொதுப் பணிகள் – தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி – அண்ணாமலை பல்கலைக் கழகத்தினால் வழங்கப்பட்ட “ இசை மாமணி (சங்கீத பூஷணம்) ” என்ற பட்டயம் அதே பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் “ இசைக்கலைமணி ” என்ற பட்டத்திற்கு இணையானது என அங்கீகரித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வி (எம்1) துறை**

**அரசு ஆணை (நிலை) எண். 228**

நாள் 10.8.2010
(திருவள்ளுவராண்டு 2041
ஆடி – 25)

படிக்கப்பட்டவை

செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண். 6429/ஆர்என்டி–எப்1/2009, நாள் 26.11.2009.

-----

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்கள், அண்ணாமலை பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் “இசைக்கலைமணி” என்ற பட்டயம் “ இசை மாமணி (சங்கீத பூஷணம்) ” என்ற பட்டத்திற்கு சமமானது என்பது தொடர்பாக, 16.11.2009 அன்று நடைப்பெற்ற 28–வது இணைக்கல்வித் தகுதி நிர்ணய பரிசீலிப்பு குழுக்கூட்டத்தின் தீர்மான நகலினை அனுப்பியுள்ளார். அதில் தீர்மான எண் 3–ல் விவாதிக்கப்பட்டு கீழ்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது

| | |
|---|---|
| Consideration of the qualification of Diploma in “Isai Kalaimani” awarded by Annamalai University from the year 1990 as equivalent to the qualification of Diploma in “Isai Mamani (Sangeetha Bhushanam) awarded by the same University early before the year 1990 for the purpose of employment in Public Service.<br><br>(C.No.5283/RND-F1/2007) | Equivalent |

த.பி.பா

2. தமிழ்நாடு இணைக் கல்வித் தகுதி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் பரிந்துரையினை ஏற்று, 1990 முதல் அண்ணாமலை பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் " இசைக் கலைமணி " என்ற பட்டயம் அதே பல்கலைக் கழகத்தினால் 1990–க்கு முன்னர் வழங்கப்பட்ட "இசை மாமணி (சங்கீத பூஷ்ணம்) " என்ற பட்டயத்திற்கு, அரசு பணிகளில் வேலைவாய்ப்பிற்காக இணையானது என அரசு ஆணையிடுகிறது. இது குறித்து தமிழ் நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணிகளுக்கான சிறப்பு/தற்காலிக விதிகளுக்கு திருத்தம் ஏதேனும் வெளியிட வேண்டியிருப்பின், உரிய கருத்துருவை உடன் அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். 283/1

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை–6.
பதிவாளர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

நகல்
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை (எம்)
சென்னை–9.
பள்ளிக் கல்வித் (ஜி,எஸ்,டி மற்றும் எச்எஸ், எம்2) துறை, சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

10/8/
பிரிவு அலுவலர்.